விஜயா பிலிம்ஸ் ...
நீதிபதி

"நீதிபதி"யில்

நடிகர்கள்

K. R. ராமசாமி	...	மாணிக்கம்
ஜெமினி கணேசன்	...	ராஜா (நீதிபதி)
S. V. சகஸ்ரநாமம்	...	தியாகராஜ முதலியார்
T. S. பாலையா	...	மாம்பழ நாயுடு
D. பாலசுப்பிரமணியம்	...	பாதிரியார்
"யதார்த்தம்" பொன்னுசாமி பிள்ளை	...	வடிவேல் முதலியார்
C. S. பாண்டியன்	...	பஞ்சவர்ணம்
M. K. முஸ்தபா	...	இன்ஸ்பெக்டர் மாதவன்
கரிக்கோல் ராஜ்	...	மாயாண்டி
M. S. கருப்பையா	...	ஆர்மோனிஸ்டு
K. கோவிந்தன்	...	தபேலா
ஷண்முகம்	...	வேலைக்காரன்
V. S. நடேசன்	...	பப்ளிக் பிராசிக்யூட்டர்
சங்கரமூர்த்தி	...	சவரிமுத்து
C. V. வேலப்பன்	...	ஜூரி
P. S. நடனம்	...	டாக்ஸி டிரைவர்
T. M. கோபால்	...	ரௌடி

மற்றும் ராஜகோபால், பொன்னுசாமி, வீராசாமி,
T. M. கணபதி N. C. ஷண்முகம் முதலியோர்.

நடிகைகள்

K. மாலதி	...	மரகதம்
ராஜசுலோசனா	...	கண்ணம்மா
M. N. ராஜம்	...	வைரம்
குசலகுமாரி	...	மீனா
P. S. ஞானம்	...	மாம்பழ நாயுடுவின் மனைவி
E. V. சரோஜா, விஜயாள்	...	கடன மாதர்கள்
P. தனம்	...	மாதவி

மற்றும் ரங்கநாயகி, முத்துலக்ஷ்மி, சீதாலக்ஷ்மி
L. விஜயலக்ஷ்மி ஆகியோர்.

"நீதிபதி"யின் சிருஷ்டி கர்த்தாக்கள்

கதை	.... S. சோலைமலை
வசனம்	.... A. K. வேலன் & சோலைமலை
பாடல்கள் இயற்றியவர்கள்	.... உடுமலை நாராயணக்கவி மருதகாசி K. P. காமாட்சிசுந்தரன் கண்ணதாசன்
சங்கீத டைரக்ஷன்	.... விஸ்வநாதன் & ராமமூர்த்தி
பின்னணி இசை பாடியவர்கள் :	.... C. S. ஜெயராமன் T. M. சவுந்திரராஜன் S. C. கிருஷ்ணன் T. V. ரத்தினம் கானசரஸ்வதி ஜமுனா ராணி A. P. கோமளா கஜலெக்ஷிமி S. J. காந்தா
ஆர்ட் டைரக்டர்	.... K. மாதவன்
ஒளிப்பதிவு	.... R. R. சந்திரன் ராஜாபாதர் & P. ராமசாமி
,, உதவி	.... B. ராமச்சந்திரய்யர் D. கோபாலகிருஷ்ணன் N. S. மணி
ஒலிப்பதிவு பாடல்கள்	.... T. S. ரங்கசாமி (ஜோதி)
வசனம்	.... D. மோஹனசுந்தரம் (வாஹினி)
உதவி	.... P. V. கிருஷ்ண ரெட்டி M. கிருஷ்ணராஜு
செட்டிங்ஸ்	.... G. குப்புசாமி R. சீனிவாசன் K. S. N. மூர்த்தி
மேக்கப்	.... கோபால்ராவ்
உதவி	.... சபாபதி, V. பாண்டியன்

உடையலங்காரம் .... C. K. கண்ணன்

உதவி .... C. K. ஹரி

எடிட்டிங் .... P. V. நாராயணன்

உதவி .... T. N. நாராயணன்

உதவி டைரக்டர் .... K. S. சேதுமாதவன் & D. R. துரைராஜ்

ஸ்டில்ஸ் .... R. N. நாகராஜராவ்

நிர்வாகம் .... G. N. வேலுமணி

புரொடக்ஷன் .... P. M. நாச்சிமுத்து

உதவி .... S. P. காவேரி & M. கணபதி

பப்ளிசிடி இன்சார்ஜ் .... M/s. Elegant Publicities & S. பிச்சாண்டி

ஸ்டூடியோ .... வாஹினி. ரேவதி, நெப்டியூன்

பிராஸெஸிங் .... விஜயா லெபரேட்டரி by S. ரெங்கநாதன்

படத் தயாரிப்பு

T. கோவிந்தராஜன்

புரொடியூஸர்

N. S. திரவியம்

ஸீனரியோ & டைரக்ஷன்

A. S. A. சாமி B. A. (Hons.)

விஜயா பிலிம்ஸ்

நீதிபதி

கதைச் சுருக்கம்

வைரம் என்ற ஆடலழகியின் மோகவலையில் கட்டுண்டிருந்தார் தியாகராசர். அவர் அண்ணன் மரணப் படுக்கையில் இருப்பதாகத் தகவல் வருகிறது. அவருக்குள்ள மனவேற்றுமைக் காரணமாக அண்ணன் முகத்தில் விழிக்கவும் மறுதளித்து விடுகிறார். தியாகராசரின் அண்ணன், மனைவி மரகதத்தை கையில் மாணிக்கத்துடன், கருப்பவதியான நிலையில் இவ்வுலகில் விட்டு மறைகிறார். வைரமும் அவள் மாமன் பஞ்சவர்ணமும் சூதாகத் திட்டமிட்டு அண்ணன் சொத்துக்கு அதிகாரியாகும் நயவஞ்சகத்தோடு அனுப்பி வைக்கின்றனர். அதன்படி வீடு திரும்புகிறார் தியாகராசர். நீலிக் கண்ணீர் வடித்து அண்ணிக்குப் போலியாக ஆறுதல் கூறுகிறார். அவளும் கொழுந்தனை நம்பி வீட்டோடு தங்கச் சொல்லுகிறாள். நிர்வாகப் பொறுப்புகளைத் தருகிறாள். பிறகு கேட்க வேண்டுமா? வைரமும் அவள் பரிவாரமும் வந்து சேருகிறது. அண்ணி மரகதத்தையே அதிகாரம் செய்கின்றனர்... உண்மையான ஊழியன் மாயாண்டி மரகதத்தின் பேரில் அனுதாபங் கொள்கிறான். அவன் மகன் மாணிக்கத்தின் சொத்து விரயமாவதைத் தடுக்க உத்தேசிக்கிறான். அவனுடைய முயற்சி தெரிந்த பஞ்சவர்ணமும் வைரமும் சொத்துக்கு வாரிசான மாணிக்கத்தை உடனடியாகத் தீர்த்துவிடத் திட்டமிடுகின்றனர். அந்த மோசத்தைப் புரிந்து கொண்ட மரகதம் இரவுக்கிரவே மகன் மாணிக்கத்தை எடுத்துக் கொண்டு கால் போனவாறு காடுமேடெல்லாம் கடந்து போகிறாள். கருப்பவதியான மரகதம் களைத்து அலுத்து ஒரு மாதாகோவில் முன் படுக்கிறாள். அயர்ந்து விடுகிறாள். அப்போது ஒரு கள்ளன் மாணிக்கத்தை எடுத்துச் சென்று விடுகிறான். பிறகு விழிப்புற்ற மரகதம் அலறி

மூர்ச்சையடைகிறாள். அந்நிலையில் அவளைக்கண்ட பாதிரியார் மரகதத்தை பிரசவ விடுதிக்கு அனுப்பி வைக்கிறார்.

இதற்கிடையில் மாணிக்கத்தின் நன்மைக்காக முயற்சித்த மாயாண்டியை பழிசுமத்தி தியாகராசர் அடித்து விரட்டுகிறார். அந்த ஏழை எசமான விசுவாசத்தோடு மரகதத்தையும் மாணிக்கத்தையும் தேடியலைகிறான். கடைசியாகத் தங்கை வீட்டுக்கு வந்து சேருகிறான். அவனுக்கு முன் அங்கே கள்ளனால் கைப்பற்றிச் செல்லப்பட்ட மாணிக்கம் அனாதையாக எடுத்துவந்திருக்கப்பட்டிருக்கிறான்.

பிரசவ விடுதியில் மரகதம் ராஜா என்ற ஆண் மகவைப் பெறுகிறாள். அந்தக் குழந்தையோடு அவளை பாதிரியார் தன் பாதுகாப்பில் ஆதரிக்கிறார்.

மாயாண்டிக்கு மரகதத்தின் இருப்பிடம் தெரியவில்லை. அதோடு அவன் தங்கையும் மாண்டு போனாள். தங்கையின் மகள் மீனாவையும் சேர்த்து தன் கண்ணின் இரு மணிகளாகக் காத்து வளர்த்தான் மாயாண்டி.

இடையில் எப்படியோ பாதிரியார் ஆதரவில் மரகதம் வாழ்வதறிந்து அவளைப் பழிகாரியாக்கி போலீசார் வசம் பிடிபடச் செய்து சிறைக்கனுப்பி வைக்கிறான் பஞ்சவர்ணம்.

பாதிரியார் ராஜாவை கோவைக்கு அனுப்பி வைக்கிறார். அங்கே காலப் போக்கில் ராஜா வளர்ந்து வக்கீலாகிறான். கோவையை அடுத்த கிராமத்தில் மாணிக்கமும் கூலிக்காரனாக வளர்ந்து பெரியவனாகிறான். மீனா அவன் அன்புத் தங்கையாகிறாள். அவள் ஒரு பூக்காரி...

இந்நிலையில், பெரிய தொழிலை முன்னிட்டு தியாகராசரும் கோவைக்கே குடியேறிவிடுகிறார். ஆண்டுகள் பலவாகியும் அவருடைய இயல்பு மாறவில்லை. ஒருநாள் பூக்காரியான மீனாவை பஞ்சவர்ணம் வஞ்சித்தழைத்து வருகிறான். வந்ததும் அவளிடம் சரசமாடுகிறார் தியாகராசர். அந்தப் பாதகத்துக்கு உடன்படாது தப்பி ஜன்னலிலிருந்து வெளியே குதித்துப் படுகாயமடைகிறாள் மீனா. அந்த வேதனையோடு வீடு திரும்பி, தியாகராசரின் கொடுமையை வெளியிட்டு உயிர் பிரிகிறாள். மாணிக்கம் வஞ்சத்தோடு புறப்படுகிறான். தியாகராஜரைப் பழிவாங்க அந்தப் போராட்டத்தில் குறுக்கிட்ட வைரம் தியாகராசரின் கத்திக்கு இரையாகிறான். ஆனால் தியாகராசர் மாணிக்கத்தை கொலைகாரனாக்கி போலீஸில் ஒப்படைக்கிறார். மாணிக்கம் குமுறும் நெஞ்சத்தோடு போகிறான்.

இதற்கிடையில் விடுதலை பெற்றுத் திரும்பிய மரகதம் மக்களைத் தேடி நாடோடியாக வரும் நிலையில் ராஜா என்ற இரண்டாவது மகனால் இனந் தெரியாமல் ஆதரிக்கப்படுகிறாள்.

போலீசில் பிடிப்பட்ட மாணிக்கம் தப்பி விடுகிறான், பழிதீர்க்க போலீஸ் தேடுகிறது சில சந்தர்ப்பங்களில் போலீசும் மாணிக்கமும் சந்திக்கின்றனர். சாகசமாகத் தப்புகிறான் மாணிக்கம். இந்நிலையில் ராஜா கண்ணம்மா என்ற ஒரு பெண்ணை காதலிக்கிறான். கல்யாணமும் செய்து கொள்கிறான். "அவள் தியாகராசரின் கணக்குப்பிள்ளை மகள்... எதிர்பாராமல் ஒரு சமயம் போலீசால் துரத்தப்பட்ட மாணிக்கம் ராஜாவின் வீட்டிலேயே ஒளிகிறான். கண்ணம்மாளும் மரகதமும் புகல்கொடுத்து விடுகின்றனர். அந்த நன்றியறிதலோடு அங்கிருந்து போய்ச் சேருகிறான்.

பிறகு, தியாகராசரின் கொள்ளிக் கண்ணிற்கு கண்ணம்மாளும் இலக்காகிறாள் திட்டமிட்டு, அவளைக் கடத்திவிடுகிறார் பஞ்சவர்ணத்தின் முயற்சியால். அவள் அவன் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் போது வழக்கம்போல் மாணிக்கம் அவளைக் காப்பாற்றுகிறான். தியாகராசரைக் கொன்று தீர்க்கிறான். அவருக்கு உடந்தையான பஞ்சவர்ணமும், மாயாண்டியால் துரத்தப்பட்டு வந்து தியாகராசர் மாணிக்கம் போராட்டத்திற்கிடையே சிக்கி மாள்கிறான்.

போலீஸ் மாணிக்கத்தைக் கைப்பற்றுகிறது. அப்போது அங்கு வந்த மரகதத்திற்கு மாயாண்டி மகன் என ஒப்புவிக்கிறான். தாயும் மகனும் தத்தளிப்போடு சட்டத்தால் பிரிக்கப்படுகின்றனர். கண்ணம்மாளும் மரகதமும் ராஜாவிடம் மன்றாடுகின்றனர் மாணிக்கத்தைக் காப்பாற்ற.

அப்போதுதான் நீதிபதியாக நியமிக்கப்பட்ட ராஜாவின் நிலைமை நெருக்கடியாகிறது. பாதிரியார் வந்து சேருகிறார். ராஜாவும் மரகதத்தின் மகன் என்பதை அறிவிக்கிறார். அந்த அன்னை மனம் துடிக்கிறாள்.

பல்லாண்டுகளுக்குப் பின் பிரிந்த செல்வர்களைப் பெற்றாள்? எந்த நிலையில்? ஒரு மகன் "கைதிக் கூண்டில் தண்டனையை எதிர்பார்த்து தூக்குமேடையின் அருகே,"—மற்ற மகன் 'நீதிபதியாக...... உடன் பிறந்தானுக்கே தண்டனை வழங்கவேண்டிய சோதனை மிக்கச் சிக்கலிலே!...... ...தாய் கதறினாள்...! மகன் தவித்தான். பிறகு.........?

1. தோழிகள் பாட்டு

இயற்றியவர்
அ. மருதகாசி

பாடியது T. V. ரத்தினம்
கான சரஸ்வதி

ஆனந்தமே ஆனந்தம் பே
ரானந்தமே ஆனந்தம் ஒ
ரழகான பெண் மானும் சீமானும் உறவாடும் (ஆனந்
தேனுண்டு வண்டாடும்
சிங்கார நிலை தன்னில்
தினந் தோறும் மனம் போல
சேர்ந்தின்ப வாழ்வு காணும் மனோகர (ஆனந்
அழகான அணியோடு
பலவண்ண ஆடை
அணிந்தாடும் புதுமங்கை
விழிகாட்டும் ஜாடை
அன்பெனும் அமுதள்ளி
வரும் தென்றல் தரும் வாடை....அதில்
அங்க மெங்கும் இன்பம் பொங்கும் காதலெனும்
அலை பரவி கொஞ்சும் (ஆனந்)
நேசம் அதன்
நினைவிலுண்டாகும் பாசம் அது
நிலை பெற உல்லாச வாசம்
நிதமும் கண்டு சுகமது வுண்டு
இதயம் ஒன்றி இருவரும்
வான், மதியுடன் குலவும் வகையினில்
மா மலர், மணம் கலந்த வகையினில்
தேன், சுவை யென
இணைந்துலகில்
இனிமை பெறும்
உறவு முறை (ஆனந்)

2. Back - ground Song

இயற்றியவர்
அ. மருதகாசி

பாடியவர்
C. S. ஜெயராமன்

தாயும் சேயும் பிரிந்ததைப் பார் சதியதனாலே !
சன்மார்க்க மில்லா கொடியவரின் தன்னலத்தாலே (தாயும்)

ஆசைப் பேயின் அடிமைகளாய் ஆனதினாலே
அநியாய மெல்லாம் மன ஈரமில்லார்
அநியாய மெல்லாம் செய்வதைப் பார் தன் மனம்போலே (தாயும்)

தீய எண்ணம் நிறைந்த நாட்டில் பிறந்ததனாலே
தூய உள்ளம் துடிப்பதைப் பார் துயரதனாலே !
பாயும் வேங்கைப் புலியுன் முன்னே மானது போல !
பழி பாவ மஞ்சா கயவர்களின் செய்கையினாலே (தாயும்)

3 வைரம் & தோழிகள்

இயற்றியவர் அ. மருதகாசி

பாடியது ஜமுனாராணி & பார்ட்டி

வந்ததடி ராஜ யோகம் !
வாழ்க்கை இனி இன்ப லோகம் !
இந்த நிலை வாழ்கவே என்றுடுவோம் விழா கொண்டாடுவோம் !
மந்திரத்தால் எந்த நாளும்
மாங்காயும் வீழ்வதில்லை !
தந்திரமும் தோற்பதில்லை
தாரணி மேலே . இந்த
தாரணி மேலே...நம்
சுந்தரனாலே இந்த வாழ்வு
வந்ததனாலே...நாம்
பண் பாடுவோம்...விழா கொண்டாடுவோம் (வந்ததடி)

வாகை சூடி வந்ததாலே
வளரும் செல்வம் தந்ததாலே
மாறாத அன்பினால் மாலை சூடுவோம்...வெற்றி மாலை சூடுவோம்
தோகையே உன் எண்ணம் போல
சூட்டிடுவோம் வண்ண மாலை
சொந்தங் கொண்ட உந்தன் அன்பன்
என்பதனாலே அன்பன்
என்பதனாலே நம்
சுந்தரனாலே இந்த வாழ்வு
வந்ததனாலே நாம்
பண்பாடுவோம் விழா
கொண்டாடுவோம் !

4. Back-ground Song

இயற்றியவர்
அ. மருதகாசி

பாடியவர்
C. S. ஜெயராமன்

தாயும் சேயும் பிரிந்ததைப் பார் சதியதனாலே
சன்மார்க்க மில்லா கொடியவரின் தந்திரத்தாலே
ஆசைப் பேயின் அடிமைகளாய் ஆனதினாலே
அநியாய மெல்லாம் மன ஈரமில்லார்
அநியாய மெல்லாம் செய்வதைப் பார் தன் மனம் போல (தாயும்)

5. மாணிக்கம் (மிட்டாய் பாட்டு)

இயற்றியவர்
உடுமலை நாராயணக் கவி

பாடியது
K. R. ராமசாமி

பல்லவி

1. ஜிலு ஜிலு வென ஜொலிக்கும் மிட்டாய்
இங்கர்து உங்கர்த லங்கிர்த மிட்டாய்
சீனிச் சர்க்கரை மிட்டாய் போல வராது
சிங்காரமான மிட்டாய் மிட்டாய் வாங்கலையோ மிட்டாய்,
மிட்டாய்

2. புத்தம் புதுசான மிட்டாய்
பொம்பாய் மிட்டாய் பூனா மிட்டாய்
புசிக்கத் தகுந்த மிட்டாய்
புகழ் வாய்ந்த பஞ்சாப் மிட்டாய்
தித்திப்பில் சிறந்த மிட்டாய்
தேனாலே செய்த மிட்டாய்
சென்னைப் பட்டணத்தார்கள் தினமும் வாங்கி இசுக்கும்
மிட்டாய்

4. பால் குடிக்கிற குழந்தைங் கெல்லாம்
சூப்பற மிட்டாய்
பல்லில்லாத கிழவங் கிழவி
சப்பற மிட்டாய்
பாலாலே செஞ்ச மிட்டாய்
பைசா இல்லாப் பிள்ளைகளுக்கு பாட்டுண்டு மிட்டாய்
இல்லை

5. சாமி கோயில் திருவிழா
சந்து பொந்து தெருவெல்லாம்
சந்தைக் கடையில் விக்கிற
ஜவ்வு மிட்டாயி
மாமியாரைக் காணுமெ
மருமகனும் வாங்கி வச்சு
மறைவாகத் திங்கிற மிட்டாய்
ஜவ்வு மிட்டாயி மிட்டாய். மிட்டாய்

6. இழுத்து விட்டா நீண்டுக்கும்
சுருட்டி விட்டாச் சுருண்டுக்கும்
இருட்டில் தின்னுக்கூட இனிக்கும்...ஜோடி
இல்லாமே சாப்பிட்டாத்தாங் கசக்கும்

6 A காலணாவை வீசி விட்டாக்
கைக் கெடியாரம்
அரையணாவை விட்டெறிஞ்சா
ஆணி முத்தாரம்
முக்காலணாக் கொடுத்தா
முடிக்கலங்காரம்
முழுசா அணாக் கொடுத்தா
அப்பத் தெரியும் நம்ம சமாசாரம்

6. Back - ground Song

இயற்றியவர்
அ. மருதகாசி

பாடியவர்
C. S. ஜெயராமன்

உண்மையான உறவு முறை உணர்ந்திடாமலே
உறவாடுது பார் உள்ளமிரண்டும் பாசத்தினாலே
உடலை இங்கு பிரிந்த போதும் சூழ்ச்சியினாலே
உணர்வைப் பிரிக்க வழியும் உண்டோ பூமியின்மேலே

(தாயும் சேயும்)

7. மாணிக்கம் & மீனு Duet

இயற்றியவர்	பாடியது
கவிஞர் கண்ணதாசன்	K. R.ராமசாமி & A. P. கோமளா

மாணிக்கம்: பறக்குது பார் பொறி
பறக்குது பார்
பதறிடும் ஏழை நெஞ்சில்
சிதறும் கோடி எண்ணம் போலே (பறக்குது பார்)

மீனு: சிரிக்குது பார்....மலர்
சிரிக்குது பார்
களங்கம் சிறிது மின்றி
கருகப் போகும் நினைவுமின்றி (சிரிக்குது பார்)

மாணிக்கம்: யார் எதை சொன்ன போதும்
யார் எதை சொன்ன போதும்
அறிவோடு பார்த்திடணும்
பகுத்தறிவோடு பார்த்திடணும்
இன்னல்கள் சூழ்ந்தாலும்
துணிவோடு வாழணும்
என்று வைத்திடும் அறிஞர்
மொழிவீசும் கனல் போலவே (பறக்குது பார்)

மீனு: அடக்கமும் அன்பும் கொண்டு
வாழ்ந்திடுவாள் மற்ற
ஆடவர் காணும் போது
தலை குனிவாள்
காமுகர் சூழும் வேளை
பாய்ந்தெழுவாள் தமிழ்க்
கன்னியரின் தன்மானப் பெருமிதம் போல
(சிரிக்குது பார்)

மாணிக்கம்: பாண்டியன் சபையினிலே
நீதி கேட்கவே
பாய்ந்தெழும் கண்ணகி போல்
பறக்குது பாராய் பொறி பறக்குது பாராய்

மீனு: வினைரை வென்று வந்த சேர மன்னராம்
அந்த வீராதி வீரரைப் போல் (சிரிக்குது பார்)

மாலிங்கம் :

சிரிக்குது பார் மலர்

பிரேமா :

சிரிக்குது பார்
சீர் பெறும் அண்ணன் தங்கை
மகிழும் வாழ்வைப் பார்த்துப் பார்த்து
(சிரிக்குது பார்)

8: நாடகப் பாட்டு

இயற்றியவர்	பாடியது
உடுமலை நாராயணக் கவி	K. R. ராமசாமி & பார்ட்டி

மாதவி :

வருவார் வருவாரென்று பார்த்தேன்
வழிமேல் விழிவைத்து உடல் வேர்த்தேன் (வருவார்)
ஒருவார மாகியும் வரக் காணேன் சகியே
ஒரு நிமிஷம் கூட இனி சகியேன்
ஸ்வாமி வருவார் வருவாரென்று பார்த்தேன்

தோழி காஞ்சனா : பொம்பளை மேலே ஆசைப்பட்டவன் எதிலே வருவாண்டி ?

மற்ற மூன்று தோழிகள் : புகை நுழையாத இடத்தில் கூட புகுந்து வருவாண்டி.

செங்கமலம் : வித்தாரக் கன்னிக்கு ஆசைப்பட்டவன் எதிலே வருவாண்டி ?

மற்ற மூன்று தோழிகள் : கத்தாழை முள்ளிலே பொத்தல் பண்ணி அதிலே வருவாண்டி.

அதிமதுரம் : சிங்காரக் கன்னிக்கு ஆசைப்பட்டவன் எதிலே வருவாண்டி ?

மற்ற மூவர்கள் : (அவன்) சீரகத்தில் பொத்தல்பண்ணி அதிலே வருவாண்டி

செங்கமலம் : மேலாமினிக்குக்கு ஆசைப்பட்டவன் எதிலே வருவாண்டி ?

மற்ற மூவர்கள் : (அவன்) ஆலம் விழுதிலே பொத்தல் பண்ணி
அதிலே வருவாண்டி

கோவலன் : மாதவி வீடென்பது இதுதானோ?
மாலையிட்டாள் வீடு இதுதானோ?
தாம்பூலம் தந்தாள் வீடு இதுதானோ! (அன்று)
சதுராட வந்தாள் வீடு இதுதானோ!

மாதவி : வாங்க மதனுங்க வரவேணுங்க நீங்க
வந்துஇந்த மஞ்சமீது உட்காருங்க
பாங்கிமார்களே பலகாரம் பண்ணுங்க நீங்க
பசும்பாலை காச்சுங்க டிக்காஷன்
காப்பி போடுங்க—போங்க

கோவலன் : மலரும் வண்டெனை இருவரும்
மருவும் சொந்தம் கொண்டிட
மாதவியான பெண்மானே உன்மேல்
காதல் கொண்டோடி வந்தேனே
மன மோகன ரதியே
என தாருயிர் நிதியே
மண வாயிலிலாடி வந்து
மாலையிட்ட மயிலே (இரு)
மாதவியான பெண் மானே

மாதவி : சத்தியம் நீர் செய்தால் நம்புவேன் இந்தத்
தையலைப் பிரியேனென்று
மெய்யாக மனமகிழ்ந்து (சத்)

கோவலன் : உத்தமி மாதவியே உமை பரமேசன்
உண்மையாகச் சொல்லுகிறேன்
உமக்கு நான் தாசன்
எந்தினமும் உனது மேல் விசுவாசன்

9. மாணிக்கம் & மாம்பழ நாயுடு (தர்க்கம் பாட்டு)

இயற்றியவர் அ. மருதகாசி } பாடியது K. R. ராமசாமி, சவுந்திரராஜன்

பெண் : உருவங் கண்டு என் மனசு உருகுது!
மனசு உருகுது!... காளைப்
பருவம் கண்டாசை பெருகுது!
ஆசை பெருகுது!

ஆண் : உருவங் கண்டு என் மனசும் உருகுது !
மனசும் உருகுது... வாலைப்
பருவங் கண்டாசை பெருகுது !
ஆசை பெருகுது !

பெண் : சொந்தங் கொள்ள என் மனசு துடிக்குது !
சொந்தங் கொள்ள என் மனசு துடிக்குது அழகு
துரையே உமை எனக்கு ரொம்ப பிடிக்குது ! ஆன
சந்தர்ப்பம் சமயம்
சந்தர்ப்பம் இப்போ என்னைத் தடுக்குது
ஓங்க தயவில்தாங்க என் வாழ்வு இருக்குது !
(உருவங்க)

ஆண் : தெந்தனத்தான் பாட்டுக்காரி ! சிங்காரி... சிரிச்சு
சிரிச்சு என்னை மயக்க எண்ணும் கைக்காரி ! வாங்கித்
தந்திடுறேன் வைரக் காப்பு மாதிரி....புதுமா திரி....கொஞ்சம்
தயவு பண்ணி கிட்டே வாடி ஓய்யாரி !
கொஞ்சம் தயவு பண்ணி கிட்டே வாடி (உருவம்) ஓய்யாரி

பெண் : அத்தானே நீங்கத்தானுங்க
என் ஆசையுள்ள
பார்த்தாவா ஆகப் போறீங்க !
என் ஆசையுள்ள
பர்த்தாவா ஆகப் போறீங்க !
அடி சக்கே;
தித்திக்கும் வெல்லக் கட்டியே
என் கண்ணில் வந்து
சிக்கிய சின்னக் குட்டியே
என் கண்ணில் வந்து
சிக்கிய சின்னக் குட்டியே !

பெண் ; மத்தவர் அஞ்சிடும் சிங்கக் குட்டியே
பத்தினி எந்தலின் தங்கக் கட்டியே (அத்தா)

ஆண் : இது சத்தியந்தானா வண்டே ? என்
காதல் கற்கண்டே ?

பெண் : இத்தனை பேச்சு ஏங்க ?....இதோ
சத்தியம் செய்தேங்க !

இருவரும்: மத்தாப்பு வாண வேடிக்கை... பீப்பீ வச்சு
மணமாலை சூடி வாழலாம் திருவாடுதுறை
பீப்பீ வச்சி.. சந்தோஷமாக
மணமாலை சூடி வாழலாம்!

10. கண்ணம்மா

இயற்றியவர்
அ. மருதகாசி

பாடியது
V. ரத்னம்

1. அன்பே நம் தெய்வம்!
அழியாப் பெருஞ் செல்வம்
உண்மை இன்பம் எல்லாம் அதனுல்தான்
உலகம் காணுதம்மா! .... (அன்)

2. கண்ணுல் காணு முன்னே
கனிவாய் பேசு முன்னே
எண்ணிப் பார்க்கும் முன்னே அதனுல்தான்
இதயம் இணைவதம்மா! .... (அன்)

3 ஈரம் இல்லாதார்
எல்லாம் நமதென்பார்
பாரி வள்ளல் போலே அன்புள்ளோர்
வாரி வழங்கிடுவார்! .... (அன்)

4. அன்பில்லா தேகம்
ஆவியில்லாக் கூடு;
என்றே திருவள்ளுவன் குறள் நூலும்
எடுத்துக் கூறுதம்மா! ... (அன்)

5. அணுவின் வலிமையினுல்
ஆளும் அறிஞரையும்
அன்பின் திறத்தாலே நாம் எளிதாக
ஆள முடியும் அம்மா!

11. Back - ground Song

இயற்றியவர்
அ. மருதகாசி

பாடியது
C. S. ஜெயராமன்

அண்ணன், தம்பி, அன்னையென்று அறிந்திடாமலே
அலைமோதி உள்ளம் துடிப்பதைப்பார் பாசத்தினாலே
உடலை இங்கு பிரிந்தபோதும் சூழ்ச்சியினாலே
உணர்வைப் பிரிக்க வழியும் உண்டோ பூமியின் மேலே (தாயும் சேயும்)

12. Back - ground Song

இயற்றியவர்
அ. மருதகாசி

பாடியது
C. S. ஜெயராமன்.

அநீதியாலே அறுந்ததடா உறவு .. முன்னாலே
உயர் நீதியினால் விளைந்ததடா பிரிவு இந் நாளே
உடலை இங்கு பிரித்த போதும் சூழ்ச்சியினாலே
உணர்வைப் பிரிக்க வழியும் உண்டோ பூமியின் மேலே
(தாயும் சேயும்)